# DIOCESAN NEWSLETTER - VELLORE

For Private Circulation Only


VOL.29 | SEPTEMBER 2026 | NO.09




# Assumption Cathedral Feast

## August 15th 2026








## Black Day

## August 10th 2026








Shepherd's Voice



## *Pastoral Perseverance, Marian Hope and Responsible Freedom*

**Dear Reverend Fathers, Sisters, Brothers and Beloved Faithful**

Greetings of peace and joy to you in the name of our Lord Jesus Christ!

The month of September places before us several beautiful moments of grace: the **Nativity of the Blessed Virgin Mary on 8 September**, the **Exaltation of the Holy Cross on 14 September**, the memory of **Our Lady of Sorrows on 15 September**, and **Bible Sunday, which we celebrate during the last week of September**. These celebrations invite us to receive the Word like Mary, remain faithful at the foot of the Cross, accompany those who suffer, and allow Sacred Scripture to shape our daily lives.

### 1. The Nativity of Mary: Every Birth Carries a Promise

On 8 September, we joyfully celebrate the Nativity of the Blessed Virgin Mary. The birth of Mary announces the dawn of salvation, for through her, God prepared a dwelling place for His Son.

Every birth carries a promise. A newborn child cannot yet speak, work, achieve, or prove anything, yet within that child lies a future known fully only to God. Mary was born into an ordinary family and lived in an insignificant village. Yet God saw in her a willing heart through whom great things could be accomplished.

Her birth teaches us never to underestimate small beginnings or ordinary lives. It invites us especially to value every child and young person entrusted to us. No child should feel inferior because of poverty, caste, family background, disability, academic performance, or social condition.

Our families, schools, parishes, and institutions must become places where children are welcomed, protected, encouraged, educated, and helped to discover their God-given gifts. The future of the Church and society is already present in the children growing among us today.

**2. The Exaltation of the Holy Cross: Love That Remains Faithful**

On 14 September, we celebrate the Feast of the Exaltation of the Holy Cross. The Cross stands at the centre of our Christian faith. We place it in our churches, homes, schools, hospitals, and institutions because it reminds us of the depth of God's love revealed in Jesus Christ.

The Cross is not a glorification of suffering. Jesus never taught us to create suffering or to remain indifferent to injustice. He healed the sick, fed the hungry, defended the weak, forgave sinners, and restored dignity to those who had been excluded.

Rather, the Cross tells us that when suffering enters human life, God does not abandon us. In Jesus crucified, God enters into our pain and transforms suffering through love.

Many crosses are carried silently among us: financial difficulties, illness, family conflicts, unemployment, loneliness, bereavement, uncertainty about the future, and many hidden struggles. As Christians, we should not increase the burdens of others. We are called to help carry them.

A truly Christian community asks not only, **"What cross must I carry?"** but also, **"Whose cross can I help carry?"**

Let our parishes be places where struggling families find support, the elderly find companionship, the sick are visited, young people receive guidance, and those who have fallen discover a hand willing to help them rise again.

**3. Our Lady of Sorrows: The Grace of Remaining**

On 15 September, immediately after the Feast of the Holy Cross, we commemorate Our Lady of Sorrows. The closeness of these celebrations is significant. On one day, we contemplate Jesus on the Cross; on the next, we contemplate Mary standing beside him.

There are moments when we cannot solve the problems of those we love. We may not have answers to their questions or solutions to their difficulties. Yet we can listen, pray, accompany, visit, console, and remain near them.

Our Lady of Sorrows speaks especially to those who silently carry pain: parents who have lost children, widows and widowers, families caring for the sick, victims of violence, people experiencing broken relationships, those living with loneliness, and those carrying wounds that others may never see.

The Church must stand beside them as Mary stood beneath the Cross. I encourage our parish communities to develop this ministry of compassionate presence.

**4. Bible Sunday: Let the Word Enter Our Lives**

During the **last week of September, we celebrate Bible Sunday**, a special occasion for our diocesan community to renew its love for the Word of God.

The Bible is one of the greatest treasures entrusted to the Church. Yet possessing a Bible is not enough. The important question is whether we read the Word of God in it, listen to it, pray with it, and allow it to influence the choices we make.

Sacred Scripture is not simply a record of events that happened centuries ago. It is the living Word through which God continues to address his people today.

When we read the Bible, we should therefore ask not only, "What happened in this passage?" but also: **"Where am I in this story? What is God saying to me today?"**

I encourage every Catholic family to give the Word of God a visible and practical place in the home. During this Bible Sunday week, let every family make an effort to read at least a short passage together each day. Let parents encourage children to read the Bible aloud. After reading, a family may simply ask: **"What is God saying to our family through this passage?"**

I invite our parishes to mark Bible Sunday meaningfully through Bible enthronement, Bible processions where appropriate, Scripture reading, Bible quizzes for children and youth, Bible exhibitions, Bible-sharing groups, and special reflections on the importance of the Word of God.

Above all, Bible Sunday should lead us beyond programmes and celebrations. The Bible must become part of our ordinary Christian life.

Our priests have a special responsibility in this regard. The homily must help people see the connection between the Word proclaimed at the altar and the realities they face in their homes, workplaces, villages, schools, and society. Our catechists, religious, teachers, parents, and youth leaders must also help cultivate a love for Scripture in the communities entrusted to them.

Let the Bible move **from the shelf to our hands, from our hands to our minds, from our minds to our hearts, and from our hearts into our lives.**

When Scripture enters the heart, it changes the way we speak, forgive, serve, spend, relate, and make decisions. The best way to honour the Bible is therefore not merely to read the Word but to **become doers of the Word** (cf. Jas 1:22).

Entrusting our diocese, our priests and religious, our families, children and young people, the sick and suffering, and all the faithful to the maternal care of the Blessed Virgin Mary, I invoke upon you the abundant blessings of Almighty God.

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

# BISHOP'S PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 01-03 | | | PMO, Bangalore |
| 04 | Fri | | Convent Blessing, Soganur |
| 05 | Sat | | RCM Teachers' Retirement function, Vellore |
| 06 | Sun | | Holy Mass, Shastri Nagar, Chennai |
| 10 | Thu | | Clergy Enhancement Programme, Vellore |
| 12 | Sat | | First Religious Profession, Adoration Monastery, Rangapuram |
| 13 | Sun | M | Vincent de Paul Annual Day Celebration, Vellore |
| E | | | Bible Convention, Vellore |
| 14 | Mon | | Confirmation, Veppoor |
| 15-16 | | | CCBI, Bangalore |
| 18 | Fri | | Malankara Youth Programme, Padi |
| 19 | Sat | | Asian Centre for Cross–Cultural Studies (ACCS), Panayur, Chennai |
| 21 | Mon | | Besant Nagar, Chennai |
| 25 | Fri | | Deacons' Pastoral Course, Sacred Heart Seminary, Poonamallee |
| 26 | Sat | | Girivalam, Madha Hill, Chetpet |
| 27 | Sun | | Pastoral Visit, Kolappalur |
| 30-01 | | | Global 2033 Summit |

## HOLY FATHER'S INTENTION

### For the Care of water

Let us pray for a just and sustainable management of water, a vital resource, so that everyone may have equal access to it.

# VICAR GENERAL OFFICE

Dear Fathers, Sisters and Brothers, three points to be noted,

1. We have the honor of the visitation of St. Theresa of Lisseux's Relic in our Diocese. The program of its visitation would be:

- Infant Jesus Church, Bagayam – Sept. 12, Saturday 10 am to Sept. 13 Sunday 11 am;
- Our Lady of Lourdes Shrine, Chetpet – Sept. 13, Sunday 12 pm to 8 pm;
- Theresa of Child Jesus Church, Theresapuram – Sept. 14, Monday 6.30 am to 8 pm.

2. Clergy Enhancement Program for Vicars Forane (Deans), New Parish Priests and Assistant Parish Priests (both Religious and Diocesan). The concerned fathers are cordially invited to attend this program without fail.

- Date: 10th Sept. 2026
- Venue: Jubilee Hall, Bishop's House, Vellore.
- Time: 10 am to 01 pm.

3. For this month, the Monthly Recollection will be at the Vicariate level.

Thank you
Sincerely your's in Christ,

**Rev. Msgr. M. John Nicholas**
Vicar General

## மேய்ப்புப்பணி நிலையம்

புதிய இயக்குநராக அருள்முனைவர் D. அருள் ஜான் போஸ்கோ அவர்களை மேய்ப்புப்பணி நிலையத்தின் சார்பாக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இறைவன் தங்களுக்கு அளித்துள்ள இந்த உயரிய பொறுப்பை ஞானத்துடனும் அன்புடனும் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடனும் சிறப்பாக நிறைவேற்ற தேவையான அருளையும் ஆசீர்வாதங்களையும் வழங்குவாராக தங்களின் தலைமையின் வழியாக மேய்ப்பபணி நிலையம் ஆன்மீக வளர்ச்சி, சமூகப்பணி மற்றும் மனித நேய சேவைகளில் மேலும் பல உயரங்களை அடைய எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளையும் செபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

Rev. Dr. D. Arul John Bosco
Mobile No. 8015570308

**பள்ளி தாளாளர் / தலைமை ஆசிரியர் அவர்களுக்கு, மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துக்கள்!**

இந்த கல்வி ஆண்டிற்க்கான பள்ளி மறைக்கல்வி மற்றும் நன்னெறி புத்தகங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாத பள்ளிகள் தயவுகூர்ந்து உடனடியாக மேயப்புப்பணி நிலையத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு கத்தோலிக்கப் பள்ளியிலும் கட்டாயமாக மறைக்கல்வி நன்னெறிக்கல்வி பாடங்கள் நடத்தப்பட வேண்டும் எனவே புத்தகங்களை பெற்றுக் கொள்ளமாறு கேட்டுக்கொள்கிறேன். புத்தக தொகையை செலுத்தாத பள்ளிகள் உடனடியாக செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**செப்டம்பர் - 2026 மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்**

5.9.26 - 6.9.26 : மாதத்தின் முதல் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை

இடம் : உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| சனிக்கிழமை 5.9.2026 | : | காலை 9.30 மணி முதல்<br>மாலை 4.00 மணி வரை |
| ஞாயிறு 6.9.2026 | : | காலை 10.30 மணி முதல்<br>மாலை 4.00 மணி வரை |
| 19.9.2026 - 20.9.2026 | : | மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை<br>மற்றும் ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : | வேலூர் ஆயர் இல்லம்<br>(ஜூபிலி ஹால்) |
| சனிக்கிழமை 19.9.2026 | : | காலை 9.30 மணி முதல்<br>மாலை 4.00 மணி வரை |
| ஞாயிறு 20.9.2026 | : | காலை 10.30 மணி முதல்<br>மாலை 4.00 மணி வரை |

திருமண தயாரிப்பு வகுப்பிற்கு பிள்ளைகளை/பெற்றோரை அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பிள்ளைகளுக்கு இரண்டு நாட்கள், பெற்றோர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மதியம் வரை அரை நாள் வகுப்பு நடைபெறும்.

இறைபணியில் அன்புடன்
அருள்முனைவர். **D. அருள் ஜான் போஸ்கோ**
மேய்ப்புப்பணி நிலையம், இயக்குநர், வேலூர்

## NECROLOGY

| | |
|---|---|
| Rev. Fr. Immanuel Alves SDB | 07-09-1976 |
| Rev. Fr. Sebastian | 10-09-2020 |
| Rev. Fr. G. Arockiasamy | 10-09-2013 |
| Rev. Fr. Fioro de Beneditto SDB | 11-09-1978 |
| Rev. Fr. M. Rayappa | 11-09-2020 |
| Rev. Fr. Michael Cusini SDB | 17-09-1976 |
| Rev. Fr. Lazar SDB | 18-09-1997 |
| Rev. Fr. C. Kurivilla | 19-09-2001 |
| Rev. Fr. A. Joseph | 21-09-2014 |
| Rev. Fr. Peter Meligo | 23-09-1958 |

## வேலூர் சமூக சேவை சங்கம்

வேலூர் மறைமாவட்டம் 09.08.2026 : அன்று பாகாயம் பங்கில் வேலூர் மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 80 பெண்கள் கலந்துக்கொண்டார்கள். பேரருட்பணி M.ஜான் நிக்கோலஸ் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார். பெண்கள் பணிக்குழு செயலர் அருட்சகோதரி C.P. ரோசலினட் பால் SSAM அனைவரையும் வரவேற்றார். செல்வி X. பிரான்ஸிக்கா "பெண்ணே நீ குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரம்" என்னும் தலைப்பில் பெண்களுக்கு கருத்துக்களை வழங்கினார். இக்கூட்டத்தில் பங்குதந்தை அருட்பணி. A. வின்சென்ட், சமூக சேவை சங்கங்களின் இயக்குநர்கள் அருட்பணி M. அமலநாதன், அருட்பணி. S. பிரான்சிஸ், அருட்பணி. D. அருள் ஜான்போஸ்கோ, மறைப்பணி இயக்குநர் தந்தை, வேலூர் சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

15.08.2026 : அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலூர் சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் அவரவர் பகுதியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பங்கேற்றனர். திருமதி. செலின் அவர்கள் வெள்ளம்பி கிராம சபை கூட்டத்தில் கலந்துக்கொண்டு கிராம வளர்ச்சிக்கான கருத்துக்களை எடுத்துரைத்தார். களப்பணியாளர்களும் அவரவர் பகுதியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கலந்துக்கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். VSSS கணக்காளர் திரு. A. இராசு லூயிஸ் அவர்கள் வள்ளிமலையில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. P.S. லீலா அலெக்ஸ் இ.அ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கலந்துக்கொண்டு கிராம வளர்ச்சிக்கான கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டார்கள்.

20.08.2026 : அன்று கொடையாஞ்சி பங்கில் அருட்பணி. சேகர் முன்னிலையில் மகளிர் சங்க சிறுத்தொழில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தென்னை ஓலை பின்னி ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டு அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் திருமதி. செலின் மற்றும் திருமதி. ஹில்டா பிரேமா ஆகியோர் கலந்துக்கொண்டு வழிநடத்தினார்கள். இப்பயிற்சியில் 30 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றார்கள்.

21.08.2026: அன்று அரக்கோணம் வட்டார களப்பணியாளர் திருமதி. ஆரோக்கியமேரி தலைமையில் மகளிர் குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் களப்பணியாளர்கள் அரக்கோணத்தில் மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திருவாளர் காந்திராஜ் அவர்களை சந்தித்து மகளிர் குழு சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் மனுவாக அளித்தனர். இச்சந்திப்பில் மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களை சிங்கப்பெண் சிறப்புப்படை திட்டத்தில் சேர்த்து அடையாள அட்டை வழங்குவதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

22.08.2026: அரக்கோணம் பகுதியில் லயன்ஸ் கிளப் மூலமாக நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் அரக்கோணம் வட்டார களப்பணியாளர் திருமதி. ஆரோக்கியமேரி முன்னிலையில் களப்பணியாளர்கள் மற்றும் வி.ஐ.டி சமூகவியல் களப்பயிற்சி மாணவர்கள் கலந்துக் கொண்டார்கள். கண் பார்வை குறைபாடுடைய 10 நபர்களை கண் அறுவை சிகிச்சைக்காக கோயம்புத்தூர் கண் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

29.08.2026 : அன்று இயக்குநர் தந்தை M. அமலநாதன் மற்றும் VSSS கணக்காளர் திரு. A. இராசு லூயிஸ் ஆகியோர் பாகாயம் பங்கை சார்ந்த மாணவ மாணவியர் மற்றும் மருத்துவ கல்லூரி படிக்கின்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது பற்றிய அறிமுக கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கல்வி நிதி உதவி திட்டத்தைப் பற்றிய தெளிவுரையை இயக்குநர் தந்தை அவர்கள் விளக்கி கூறினார். மாணவர்களின் பெற்றோர்களும் இதில் கலந்துக்கொண்டு பயன் பெற்றனர்.

செய்தி தொகுப்பு
திரு. **ஏசுகுமார்**
கோல்பிங் ஒருங்கிணைப்பாளர்

அருட்பணி **M. அமலநாதன்**
இயக்குநர், VSSS

## திருவண்ணாமலை சமூக சேவை சங்கம்

31.07.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்க பணியாளர்களுக்கான மாதாந்திர கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. பணியாளர்களின் சென்ற மாத பணிகள் குறித்தும், பணியின் சவால்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. வரும் மாதத்தில் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து திட்டமிடப்பட்டது. பணித்தளங்களில் பணியாளர்கள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து இயக்குநர் அருட்பணி. S. பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

07.08.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கம் மற்றும் சிகரம் தொண்டு நிறுவனம் இணைந்து We Lead திட்டத்தின் கீழ் மோட்டசவாடி கிராமத்தில் பெண்கள் தலைமைத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி அருட்பணி. S. பிரான்சிஸ் மற்றும் அருட்பணி. ஜீவகன் தலைமையில் நடைபெற்றது. பெண்கள் தங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிந்து கொண்டு, குடும்பம், சமூகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தன்னம்பிக்கையுடன் பங்கேற்பையும், தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதையும் ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்கள் தலைமை ஏற்றால் கிராமம் முன்னேறும், பெண்களின் குரல் வலுப்பெற்றால் சமூகத்தின் வளர்ச்சி உறுதியாகும் என்ற கருத்தை மையமாக கொண்ட இந்த கூட்டத்தில் கிராமப் பெண்கள் 85 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக ஒருங்கிணைப்பாளர் திருமதி. சுமித்தா அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

08.08.2026 போளூர் மற்றும் சேத்துப்பட்டு மறைக்கோட்டங்களில் உள்ள பங்குகளில் வாழ்கின்ற இளம் விதவை மற்றும் தனித்தாய் பெண்களுக்கான உளவியல் மற்றும் மனநல மேம்பாட்டு கருத்தரங்கு சேத்துப்பட்டு கோடெப் நிறுவனத்தில் திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. இக்கூட்டமானது TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ், அவர்கள் தலைமையிலும், கருத்துரையாளர்களாக அருட்பணி. ஜீவகன், அருட்சகோ. சகாயராணி, TVMSSS திட்ட மேலாளர் L.T. இன்பசேகர் மற்றும் மகளிர் திட்ட வாழ்வாதார பயிற்றுநர் திரு. செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு விதவை மற்றும் தனித்தாய் பெண்களுக்கான

உளவியல் மற்றும் மனநல மேம்பாட்டிற்கான கருத்துக்களையும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான அரசு நலத்திட்டங்கள் பற்றியும் விளக்கமளித்தனர். சமூகப்பணியில் புதிய முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த சிறப்பு கருத்தரங்கில் 315 இளம் விதவை மற்றும் தனித்தாய் பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

10.08.2026 TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ் அவர்கள் பூதமங்கலம் பங்கு அதன் கிளை கிராமங்களான ஆர்ப்பாக்கம் மற்றும் மங்கலம் ஆகிய கிராமங்களில் செயல்படும் மகளிர் குழுக்கள், மாற்றத்தின் கைகள் குழுக்களை நேரில் சென்று சந்தித்து குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் மகளிர் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

11.08.2026 சேத்துப்பட்டு பங்கின் கிளை கிராமங்களான அப்பேடு, தத்தனூர் மற்றும் மருத்துவாம்பாடி ஆகிய கிராமங்களில் செயல்படுகின்ற மகளிர் குழுக்கள் மற்றும் மாலை நேர வகுப்புகளை TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ் அவர்கள் நேரில் சென்று சந்தித்து அவர்களின் செயல்பாடுகளை கேட்டறிந்து ஆய்வினை மேற்கொண்டார். மேலும் மரம் நடும் திட்டத்தை பற்றி விளக்கமளித்து பனை விதை சேகரிக்கவும், விதை நடவு பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

12.08.2026 கெங்காபுரம் பங்கின் கிளை கிராமங்களான விண்ணமங்கலம் மற்றும் முருகானந்தல் ஆகிய கிராமங்களில் செயல்படுகின்ற மகளிர் குழுக்கள் மற்றும் மாலை நேர வகுப்புகளை TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ் அவர்கள் நேரில் சென்று சந்தித்து அவர்களின் செயல்பாடுகளை கேட்டறிந்து ஆய்வினை மேற்கொண்டார். மேலும் மரம் நடும் திட்டத்தை பற்றி விளக்கமளித்து பனை விதை சேகரிக்கவும், விதை நடவு பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

13.08.2026 TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ் அவர்கள் தச்சாம்பாடி, தும்பூர், முருகமங்கலம், புலிவானந்தல் மற்றும் அரும்பலூர் ஆகிய கிராமங்களில் செயல்படும் மகளிர் குழுக்கள், மாற்றத்தின் கைகள் குழுக்களை நேரில் சென்று சந்தித்து குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டார். மேலும் மாலை நேர வகுப்புகளை சந்தித்து அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வினை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் மகளிர் உறுப்பினர்கள் மற்றும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

22.08.2026 திருவண்ணாமலை மற்றும் வேட்டவலம் மறைக்கோட்டங்களில் உள்ள பங்குகளில் வாழ்கின்ற இளம் விதவை மற்றும் தனித்தாய் பெண்களுக்கான உளவியல் மற்றும் மனநல மேம்பாட்டு கருத்தரங்கு திருவண்ணமலை உலகமாதா மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டமானது TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ், அவர்கள் தலைமையிலும், கருத்தூட்டநர்களாக அருட்பணி. ஜீவகன், அருட்சகோதரி. சகாயராணி, TVMSSS திட்ட மேலாளர் L.T. இன்பசேகர் மற்றும் மகளிர் திட்ட வாழ்வாதார பயிற்றுநர் திரு. செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு விதவை மற்றும் தனித்தாய் பெண்களுக்கான உளவியல் மற்றும் மனநல மேம்பாட்டிற்கான கருத்துக்களையும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான அரசு நலத்திட்டங்கள் பற்றியும் விளக்கமளித்தனர். சமூகப்பணியில் புதிய முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த சிறப்பு கருத்தரங்கில் 115 இளம் விதவை மற்றும் தனித்தாய் பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

26.08.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கம் மற்றும் சிகரம் தொண்டு நிறுவனம் இணைந்து We Lead திட்டத்தின் கீழ் கெங்கப்பட்டு கிராமத்தில் பெண்கள் தலைமைத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி அருட்பணி. S. பிரான்சிஸ் மற்றும் அருட்பணி. செல்வராஜ், ச.ச, தலைமையில் நடைபெற்றது. பெண்கள் தங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிந்து கொண்டு, குடும்பம், சமூகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தன்னம்பிக்கையுடன் பங்கேற்பையும், தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதையும் ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்கள் தலைமை ஏற்றால் கிராமம்

முன்னேறும், பெண்களின் குரல் வலுப்பெற்றால் சமூகத்தின் வளர்ச்சி உறுதியாகும் என்ற கருத்தை மையமாக கொண்ட இந்த கூட்டத்தில் கிராமப் பெண்கள் 45 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஜோஸ் கேத்திரின் அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

27.08.2026 திருவண்ணாமலை சமூக சேவை சங்கம் சார்பில் மரம் நடும் திட்டத்தின் கீழ் மகளிர் அமைப்புகள் மூலம் பனை விதைகள் சேகரிக்கப்பட்டு அவற்றை நடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனை தொடர்ந்து பத்தியாவரம், தச்சாம்பாடி, விருதுவிளங்கினான், மதுராம்பட்டு, மருத்துவாம்பாடி ஆகிய பங்குகளில் பனை விதைகள் அளிக்கபட்டு அவற்றை நடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை இயக்குநர் தந்தை அருட்பணி. S. பிரான்சிஸ் மற்றும் பணியாளர்கள் அனைவரும் முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர்.

செய்தி தொகுப்பு

திருமிகு. L.T. **இன்ப சேகர்**<br>
TVMSSS திட்ட மேலாளர்

அருட்பணி. **S. பிரான்சிஸ்**<br>
இயக்குநர் TVMSSS

## BIRTHDAY

| | |
|---|---|
| Rev. Fr. A. Jonas Philomina Doss | 01.09.1979 |
| Rev. Fr. Jose Enchakal | 03.09.1951 |
| Rev. Fr. N. Arockia Doss | 06.09.1970 |
| Rev. Fr. K. A. Rayappa | 08.09.1954 |
| Rev. Fr. A. Bernard Velanganni | 08.09.1972 |
| Rev. Fr. R. James Vincent | 10.09.1957 |
| Rev. Fr. A. Yesu Durai | 15.09.1984 |
| Rev. Fr. M. Martin | 19.09.1958 |
| Rev. Fr. S. Sagayanathan | 19.09.1973 |
| Rev. Fr. M. Thangaraj | 19.09.1974 |
| Rev. Fr. G. Mathias | 20.09.1940 |
| Rev. Fr. A. Lazar Velankanni | 23.09.1981 |
| Rev. Fr. Y. Anthony Raj | 25.09.1953 |
| Rev. Fr. A. Roy Lazar | 28.09.1959 |
| Rev. Fr. V. Kuriakose Kariakatt | 30.09.1951 |

# DIOCESAN ECOLOGY COMMISSION

As a part of *Laudato Si* mission of promoting Creation Care initiatives at the parish level, the Diocesan Ecology Commission has started a new tradition of visiting all the parishes in the diocese of Vellore. This mission is based on a recent Vatican's document known as "Integral ecology in the life of the family," released jointly by the Dicastery for Promoting Integral Human Development and the Dicastery for Laity, Family and Life, to help households connect care for creation with everyday family life. The core of the document covers seven central areas inspired by *Laudato Si*:

1. Listening to the cry of the earth
2. Listening to the cry of the poor
3. Ecological economics
4. Ecological life style
5. Ecological education
6. Ecological spirituality
7. Ecological community participation

The Vellore diocesan ecology commission had visited the following 7 parishes in the diocese, with the celebration of the Sunday mass and instructing people on the above precepts. The parish priests, parish councils, sister superiors and the headmasters/teachers of the religious institutions of the following parishes have extraordinarily cooperated and encouraged people to involve in this Creation Care Celebrations.

| | |
|---|---|
| 1. Gudiyattam | July 5-7 |
| 2. Pallikonda | July 12-13 |
| 3. Theresapuram | July 19-20 |
| 4. Shenbakkam | August 2 |
| 5. Arakonam | August 9-11 |
| 6. Kaniyambadi | August 16-17 |
| 7. Tirupattur | August 23-29 |

# SC/ST **பணிக்குழு**

## நன்றி மற்றும் பாராட்டு அறிக்கை

வேலூர், ஆகஸ்ட் 10 : தலித் கிறிஸ்தவர்களை SC பட்டியலில் சேர்க்கக் கோரி, ஆகஸ்ட் 10-ஆம் தேதி “கருப்பு நாள்” கடைப்பிடித்து நடைபெற்ற மாபெரும் கண்டன எழுச்சி ஆர்ப்பாட்டம் வேலூரில் சிறப்பாக நடைபெற்றது.

வேலூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட கத்தோலிக்க குருக்கள், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த 35-க்கும் மேற்பட்ட குருக்கள், 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் SC/ST பணிக்குழு உறுப்பினர்கள் திரளாகப் பங்கேற்று, தங்களது கண்டனத்தையும் உரிமைக் கோரிக்கையையும் வெளிப்படுத்தினர்.

இப்போராட்டத்திற்கு வேலூர் மறைமாவட்ட ஆயர் டாக்டர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்களும், தென்னிந்திய திருச்சபை ஆயர் சர்மா நித்தியானந்தம் அவர்களும் தலைமை ஏற்று வழிநடத்தினர். மேலும், பேரருட்பணி பூபதி லூர்துசாமி அவர்களும், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த டாக்டர் ஐசக் கதிர்வேலு அவர்களும் சிறப்பு கண்டன உரையாற்றினர்.

SC/ST கிறிஸ்தவர்களின் உரிமைக்கான இப்போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு வழங்கிய ஆயர்கள், குருக்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுநல அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் SC/ST பணிக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் SC/ST பணிக்குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

“உரிமைக்கான குரல் ஓயாது; சமூக நீதிக்கான போராட்டம் தொடரும்!”

அருட்பணி . **ஆரோக்கியராஜ்**
செயலர், SC/ST பணிக்குழு

## மரியாயின் சேனை

"நம் தீமைகளுக்கெல்லாம் செபமாலை ஒரு மாற்று மருந்து, நாம் பெறும் அருள்வரங்களுக்கெல்லாம் அது ஆணி வேர்." (திருத்தந்தை 13 ஆம் லியோ)

இறை இயேசுவின் தெய்வீக நாமத்திலும், அன்னை மரியாளின் மாசற்ற நாமத்திலும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் செபங்களும். இம்மாதம் கொமித்சியக் கூட்டம் 09.08.2026 பிற்பகல் 2.00 மணிக்கு நமது ஆயர் இல்ல வளாகம் ஜூபிலி அரங்கில் சிறப்பாக நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் 67 சேனையர்கள் வருகைப் புரிந்தனர். அதில் விசேஷமாக இளையோர் மற்றும் இளைஞர் இளம் பெண்கள் மட்டும் 27 பேர் ஆவர். சிறப்பு பார்வையாளர்களாக கோணாமேடு பிரசிடிய (திருப்பத்தூர் கியூரியா) உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். நிர்வாக சபையின் சேனை செபவழிப்பாட்டு முறை ஒருங்கே கடைபிடிக்கப்பட்டது. மறைமாவட்ட பக்தசபை இயக்குநரும் சேனையின் ஆன்ம இயக்குநருமான அருட்பணி. யேசுதுரை அடிகளார் அவர்கள் ஆரணி, சேத்துப்பட்டு, போளூர், வந்தவாசி மற்றும் அரக்கோணம் ஆகிய கியூரியாக்களை நேரே சென்று பார்வையிட்டார். செப்டம்பர் மாத இறுதிக்குள் தந்தை அவர்கள் மீதமுள்ள கியூரியாக்கள் மற்றும் நேரடி பிரசீடியங்களை பார்வையிட திட்டமிட்டுள்ளார். ஆன்ம இயக்குநர் தந்தை அவர்களின் சந்திப்பின் முக்கிய நோக்கமாக, வருகின்ற அக்டோபர் 18ம் தேதி நடைபெறவுள்ள ஆயரின் தலைமையிலான மரியாயின் சேனை மாநாடு - 2026 (சேத்துப்பட்டு, மாதாமலை) சேனையரின் ஒழுங்குமுறையும் ஒத்துழையும் சிறப்பாக அமைய வேண்டி ஆலோசனை வழங்குவதாக அமையப்பெற்றது. மேலும் அருட்பணி. யேசுதுரை அடிகளார் 02.08.2026 ஞாயிறன்று பிற்பகல் 2.30 மணியளவில் சென்னை மத்தியாஸ் மேன்ஷனில் நடைப்பெற்ற செனாத்துஸ் நிர்வாக சபைக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டார். தந்தையின் வருகையும் வாழ்த்துரையும் அனைவரையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. சென்ற மாதம் சந்தித்த கியூரியாக்கள் இராணிப்பேட்டை, திருமலை (போளூர் கியூரியா) மற்றும் சேண்பாக்கம் (நேரடி பிரசிடியம்) இம்மாத சந்திப்பு அரக்கோணம், ஆரணி கியூரியாக்கள்.

மரியே வாழ்க
**கா. மெரிண்டோ ப்ரணான்டோ**
து.தலைவர், வேலூர் கொமித்சியம்

## இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பொறுப்பாளர்கள் தேர்வு அறிக்கை

வந்தவாசி தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில், இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களின் இறைப்பணி, ஒற்றுமை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு 23.08.2026 அன்று நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை திருப்பலி நிறைவடைந்த பின்னர் நடைபெற்ற இந்நிகழ்வு இறைவேண்டுதலுடன் தொடங்கப்பட்டது. வேலூர் மறைமாவட்ட இளையோர் பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை ஆனந்தராஜ் அவர்களும், பங்குத்தந்தை அருட்பணி டேனியல் அவர்களும் அருட்தந்தை அந்தோனி பிரேம்குமார் அவர்களும் திரு. சுரேஷ் ஆசிரியர் தலைமையேற்று தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இந்நிகழ்வில் மொத்தம் 80 இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில், முதற்கட்டமாக தலைவர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. தலைவர் பதவிக்கு திரு. வின்செண்ட் சேது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் தேர்தலைத் தொடர்ந்து புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனார், பொறுப்பாளர்கள் பின்வருமாறு
1. துணைத்தலைவர் – செல்வி அனுசியா 2. செயலாளர் – செல்வி எமிமா ஏஞ்சல் மேரி 3. துணைச் செயலாளர் – திரு. சிரன்ஜீவி
4. பொருளாளர்– திரு. ஹானஸ்ட் ராஜ்

மேலும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு தொடர்ந்து வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் வகையில், மூத்த உறுப்பினர் திரு. சுரேஷ் ஆசிரியர் அவர்கள் வழிகாட்டியாக நியமிக்கப்பட்டார்.

தேர்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பொறுப்பாளர்களும் இணைந்து, தேர்தலை சிறப்பாக நடத்தி வழிகாட்டிய வேலூர் மறைமாவட்ட இளையோர் பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை ஆனந்தராஜ் அவர்களுக்கும், பங்குத்தந்தை அருட்பணி டேனியல் அவர்களுக்கும், தேர்தல் பணிகளில் உதவிய மூத்த உறுப்பினர் திரு. சுரேஷ் ஆசிரியர் அவர்களுக்கும் பொன்னாடை அணிவித்து, தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் தங்களுக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு, பங்கு இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களின் ஒற்றுமை, வளர்ச்சி மற்றும் இறைப்பணியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் செயல்படுவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். 30.08.2026 ஞாயிற்றுக்கிழமை திருப்பலி நிறைவடைந்த பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பொறுப்பாளர்களுக்கு வயதில் மூத்தோர்களால் அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு, இறைவேண்டுதலுடனும், ஒற்றுமையான பங்கேற்புடனும் தொடங்கிய இந்நிகழ்வு, நன்றியுணர்வுடன் நிறைவடைந்தது.

**சு. வின்செண்ட் சேது**
தலைவர்

## CALENDAR

| | | |
|---|---|---|
| 03 | Thu | St. Gregory the Great, PP., Dr., Mem |
| 05 | Sat | St. Thresa of Kolkata, Vir |
| 06 | Sun | 23rd Sunday in Ordinary Time |
| 08 | Tue | The Nativity of Blessed Virgin Mary, Feast |
| 09 | Wed | St. Peter Claver, Mem |
| 12 | Sat | The Most Holy Name of Mary |
| 13 | Sun | 24th Sunday in Ordinary Time |
| 14 | Mon | The Exaltation of the Holy Cross, Feast |
| 15 | Tue | Our Lady of Sorrows, Mem<br>Anniversary of the Dedication of the Assumption Cathedral, Vellore |
| 16 | Wed | Ss. Cornelius Pp., & Cyprian Bp. Mrs, Mem |
| 17 | Thu | St. Robert Bellarmine Bp., Dr., |
| 20 | Sun | 25th Sunday in Ordinary time |
| 21 | Mon | St. Matthew Ap, Ev, Feast |
| 23 | Wed | St. Pio of Pietrelcina Pr. Mem. |
| 26 | Sat | Ss. Cosmas and Damian Mrs. |
| 27 | Sun | 26th Sunday in Ordinary Time |
| 29 | Tue | The Holy Archangels, Michael, Gabriel and Raphael, Feast |
| 30 | Wed | St. Jerome Pt., & Dr., Mem |

## St. John Mary Vianney Feast I August 4th I 2026



## Ulaga Madha Church Feast ,Tiruvannamalai
## August 23rd I 2026





Remembering
MOTHER
TERESA
on her Death Anniversary
September 5th

அன்பிற்கினிய ஆசிரியர் பெருமக்களே

மாணவர்களின் அறிவையும் நற்பண்புகளையும் வளர்த்து,
அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும்
உங்கள் அர்ப்பணிப்பான கல்வி பணிக்காக
**உங்களை மனதாரப் பாராட்டுகிறேன்.**

குறிப்பாக R.C.M. பள்ளிகளில் கல்வியோடு
மதிப்பீடுகளையும் மனிதநேயத்தையும் விதைக்கும்
உங்கள் சேவை மிகவும் போற்றத்தக்கது.
இறைவன் உங்களுக்கு நல்ல உடல் நலம்,
ஞானம் மற்றும் கல்விப் பணியில்
நிறைவான மனநிறைவையும் மனமகிழ்ச்சியையும்
அருள்வாராக.

மேதகு ஆயர் **அம்புரோஸ்**
வேலூர் மறைமாவட்டம்



செப்டம்பர் 5
இனிய
ஆசிரியர் தின
நல்வாழ்த்துக்கள்!